





## பள்ளக்கால் யோக நரசிம்ம பெருமாளின் தெய்வீக அருள்

தெய்வீகமும், சாந்தமும் குடி கொண்டிருக்கும் அருள்மிகு யோக நரசிம்மர் ஆலயம் நாற்புறமும் வயல் சூழ்ந்து, சுமார் 300 ஹெக்டர் நிலப்பரப்பில், அம்பாசமுத்திரம் தாலுகாவில், நெல்லை மாவட்டம், தமிழ் நாட்டில் அமைந்துள்ளது. இந்தக் கோவில் சைவமும் வைணவமும் இணைந்து, ஒரு ஒருமைபாட்டை உருவாக்கும் வகையில் இந்த மாநிலத்தில் உள்ள வேறு சில கோவில்களபோல் உள்ளது. இந்த ஆலயத்தின் கர்பக்க்ருகத்தில் உள்ள யோக நரசிம்ஹர் சிவன் ஆழ்ந்த த்யானத்தில் இருப்பதைப்போல் உள்ளார். அந்த நரசிம்ஹ பெருமாள் சந்நிதியில் நின்று சற்று கண் மூடி த்யானம் சைதாள் சிவம் விஷ்ணு வடிவத்தில் காட்சி தருவதுபோல் ஒரு பிரமிப்பு ஏற்படும். மேலும், காக்கும் தொழிலையே முதற் பொறுப்பாக கொண்டுள்ள மஹாவிஷ்ணு தன் நரசிம்ம அவதாரத்தில் தோன்றிய அக்கணமே சிவ பெருமானின் முதலாய பொறுப்பான தீமை அழித்தல் கடமையை முன்னெடுத்து ஹிரண்யகசிபு என்ற அரக்கனை அழித்தமை மூலம் நமது நரசிம்மர் சிவ விஷ்ணு ஐக்கியத்தை பிரதிபலிக்கிறார்.



பள்ளக்கால் யோக நரசிம்ம பெருமாள்



அருள்மிகு யோக நரசிம்மர் ஆலயம்

contd…….on page 2/-

contd…….from page 1/n ante



இவ்வாறு, தமிழ், தெலுங்கு, கன்னடம், மற்றும் வேறு மொழி பேசும் மக்கள் பாகுபாடு இல்லாமல் ப்ரதோஷம் அதாவது சந்திரப்பிறை, 13வது நாளில் த்ரயோதசி ஸந்த்யா காலத்தில் எல்லா சிவன் கோவிலில் சைவமுறைப் படி நடைபெறும் அபிஷேக பூஜை ஆராதனைகள், நம் குலதெய்வம் பள்ளக்கால் யோகநரஸிம்ஹர் கோவிலிலும் கொண்டாடப்படுவது, ஒரு தனிச்சிறப்பு மட்டும் இன்றி, நம் கோவிலின் சைவ வைஷ்ணவ ஒருமைப்பாட்டை முன்னெடுத்து காட்டுவதாகவும் அமைந்துள்ளது. நித்திய பூஜை களை ஸ்ரீவைஷ்ணவ பட்டர் நடத்தி வருகிறார்: அதற்கு ஆதரவைப் பெரும்பாலும் சைவ, ஸ்மார்த்த பக்தர்கள் அளித்து வருகின்றனர். பாபத்தை போக்கவும் , ஜோதிட ரீதியில் குறை ஏதாவது இருந்தால் அதை நீக்கவும் இந்த கோவிலுக்கு வருகை தந்து பரிகார பூஜைகள் செய்து வேண்டுதலை நரசிம்ஹரிடம் வைத்து பக்தர்கள் நிம்மதி பெறுகிறார்கள்.

இந்த திரு கோவில் கடைசியாக புதுப்பிக்கப்பட்டு ஸம்ப்ரோக்ஷணம்( ஸ்ரீவைஷ்ணவ முறையில் நடத்தப்படும் கும்பாபிஷேகம்) 1999 ஆம் ஆண்டில் நடந்தது. தற்போது இந்த திரு கோவிலை குல தெய்வமாக போற்றும் குடும்பத்தினர் சிலர் ஒரு டிரஸ்ட் அமைத்து இந்து சமய அறநிலையத் துறையின் ஆதரவோடு இந்த கோவிலை மறுபடியும் புதுப்பித்து ஸம்ப்ரோக்ஷணம் செய்யும் பணியில் ஈடுபட்டு உள்ளார்கள். டிரஸ்ட் கோவிலை புதுப்பிக்கும் பணிக்கும், ஸம்ப்ரோக்ஷணம் என்ற கும்பாபிஷேகத்திற்கும் 50 லட்சம் ரூபாய் மேல் செலவாகும் என்று அனுமானிக்கிறது. இதில் ஒரு எல்லைச் சுவரைக் கட்டுவது (600 அடிக்கு மேல்), உள்ளே உள்ள நிலத்தை உறுதி படுத்தி சமதளம் செய்தல், தொலைதூர இடங்களிலிருந்து கோயிலுக்கு வரும் குடும்ப உறுப்பினர்கள் தங்குவதற்காக குளியல் மற்றும் சமையலறை வசதிகளுடன் கூடிய ஒரு அறை கட்டுவது, கோவில் மண்டபத்தின் பராமரிப்பு, மடப்பள்ளி என்னும் கோவில் பிரசாத சமையலறை பழுதுபார்ப்பு, கர்பகிரஹத்தின் மேல் ஒரு விமான கோபுரம் கட்டுதல், மற்றும் புதிய ஒரு கருட-சன்னிதி கட்டுதல், ஆகியவை உள்ளன. இந்த திட்டத்திற்கு தேவையான பணத்தை அறக்கட்டளை குடும்ப உறுப்பினர்களிடமிருந்து மட்டுமே திரட்டுகிறது. ஒரு WhatsApp Group தவிர, MyHeritage.com வெப் போர்டலில் ஒரு குடும்ப மரத்தின் மூலம் குடும்பத்தை இணைக்க அறக்கட்டளை முயற்சிக்கிறது. இந்த இணைய தளங்கள் உருவாகி இதுவரை தழைத்து ஓங்குகிறது. மேலும், மேலும், இணைய தளமும் நம் கோவிலும் வளர்ந்து ஓங்க யோக நரசிம்ஹர் அருள் பெறுவோமாக...!! தழைப்போமாக...!!

**Registered as Number R/Kodmbakkam/Book-4/18/2020** [BKIU/18/2020 – TP/84637234/2020 – Document 18 of 2020 in Book IV (14 sheets) at the Office of the Sub-Registrar at Kodambakkam in Chennai-600026]

*“aarjay” / “Bagthava” Flats,* House/Door No. 15 (New)/9 (Old) [Ground Floor],
**Thiruvalluvar Street, Rajaram Mehta Nagar CHENNAI-600 029**

+ 91 44 2374 1343
+ 91 8743898876 (N. Balasubramaniyan)
+ 91 9789877245 (Hariharan M)

aysevatrust@gmail.com/balaviji5358@gmail.com/gmahari@gmail.com